www.padippakam.com

# புரட்சிகர இலங்கை பொதுவுடமைக் கட்சி (RCPC) உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்

புரட்சிகர பொதுவுடமைக் கட்சியை கட்டுவது, (RCPC) இலங்கையில் புதிய சனநாயக புரட்சியை வெல்வது.. புதிய சனநாயக அரசை நிறுவும் நோக்கில் இலங்கை மக்களின் விடுதலைக் கூறுகள் போராட்டங்கள் ஒவ்வொன்றையும் தலைமை தாங்கி நடத்த வேண்டிய கடமையுள்ளது. புதிய சனநாயக அரசு, சமத்துவத்தை (சோசலிசத்தை) பொதுவுடமை சமூகத்தை (கொம்யூனிசத்தை) நோக்கி தொடர்ந்து முன்னேறும் இலட்சிய நோக்கில் நாங்கள் எங்களை அறிவுபூர்வமாக அர்ப்பணித்து செயற்பட வேண்டும். தத்துவம், பொருளாதாரம், அரசியல், இராணுவம், பண்பாடு என எல்லா அரங்கிலும், கட்சி தன்னை சித்தாந்தரீதியிலும், நடைமுறைப் போராட்டங்களிலும் மிக முன்னேறிய நிலையை அடைய தொடர்ந்து படிப்பு, கிரகிப்பு, நடைமுறைச் செயற்பாடு என்பவற்றில் இடைவிடாது வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இலங்கை பொதுவுடமைக் கட்சியின் (CPC) வரலாற்று தொடர்ச்சியில் அதன் வரலாற்று ரீதியான தவறுகளை கண்டறிந்து தொடர்ந்து திருத்த வேண்டும் சமரசமற்ற சித்தாந்த போராட்டத்தின் மூலம் நமது கட்சி அனைத்து விடயங்களிலும் மார்க்சிய லெனினிய மாஓ சிந்தனைகளை திடப்படுத்த வேண்டும். CPC இன் சரியான நிலைப்பாடுகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். CPCஐ நிறுவிய, அதன் தலைசிறந்த போராடங்களுக்கு தலைமை தாங்கிய தோழர்களின் தியாகங்களை CPC இன் தவறுகளை எதிர்த்து புரட்சிகர வழியை நிறுவி போராடிய தோழர்களின் தியாகங்களை மதிக்க வேண்டும்.

கட்சி திட்டம் எவ்வளவுக்கு எவ்வளவு விஞ்ஞானபூர்வமான திட்டமாக வளர்கிறதோ அவ்வளவுதூரம் நமது கட்சி புரட்சிக்கு தலைமை தாக்கும் சக்தியாக மாறும்.

உலக பொதுவுடமை இயக்கத்துள், தெற்காசிய பொதுவுடமை அமைப்புக்குள் நடந்துவரும் மாற்றங்களை நாம் தொடர்ந்து ஊன்றிக் கவனிக்க வேண்டும். புரட்சிகர இந்திய பொதுவுடமை கட்சிகளுடன் மிக நெருக்கமாக இருந்து நாம் கவனித்த ஒவ்வொன்றையும், மற்றும் சர்வதேச கட்சிகளிடம் நாம் கவனித்த விடயங்களையும் (குறிப்பான நடைமுறை அம்சங்களை தவிர்த்து,) கோட்பாட்டு ரீதியிலும், மூலோபாய விடயங்களிலும் சிறந்த புரிதல்களை பெற உதவியுள்ளது. இதை நமது கட்சி தொடர்ந்து வளர்த்தெடுத்து செல்ல வேண்டும்.

★ மார்க்சிய – லெனினிய – மாஓ சிந்தனையை புரட்சிகர தொழிலாளிவர்க்கத்தின் சித்தாந்த ஆயுதம் என்பதை புரிந்து ஏற்றுக் கொள்வது.

★ உலக ஏகாதிபத்தியத்தை உள்நாட்டு ஆளும் அரசை தூக்கி எறிந்து புதிய சனநாயக அரசை நிறுவுவதற்கான பாதை குறித்து நாம் தெளிவுடன் செயற்பட வேண்டும்.

★ இலங்கை புதிய சனநாயக புரட்சியை நடத்தும் இலக்கில், சிறீலங்காவிலும் – தமிழீழத்திலும் உள்ள புரட்சிகர பொதுவுடமை சக்திகள் தங்களை ஒரு மையமான கட்சி திட்டத்தின் கீழ் அய்க்கியப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

★ புரட்சிகர பொதுவுடமை கட்சியின் தலைமையை விரிவுபடுத்தி வளர்ப்பது, கட்சி தலைமை உறுப்பினர்களின் தத்துவ பொருளாதார அறிவை– நடைமுறைப் போராட்டங்களுக்கு வழிகாட்டும் திறனை தொடர்ந்து வளர்ப்பதற்கான வழிகள் காணப்பட வேண்டும்.

★ புரட்சிக்கு பின் அரசை வழி நடத்தும் ஆற்றல் பற்றிய கோட்பாட்டு – நடைமுறை பிரச்சனை கவனத்தில் கொள்ள வேண்டும், நடந்த புரட்சிகளின் அனுபவங்களுடன் இவற்றை கிரகிக்க பயிற்சி பட்டறைகள் திட்டமிட்டு நடத்த வேண்டும். புரட்சிக்கு முன்னும் / பின்னும் கட்சிக்குள்ளாகவே திரிபுவாத வழிகள் வெளிப்படுவதற்கான சமூகக்காரணங்களை கண்டறிவதிலும் அவற்றை வெற்றி கொள்ளத் தேவையான தத்துவ அரசியல் பொருளாதார விழிப்புணர்வை தொடர்ந்து கட்சி ஊழியர்கள் பெறுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும், நபர்களின் தவறுகளாக மட்டும் பிரச்சனைகளை திசைதிருப்பும், கவனிக்க மறுக்கும் போக்கை களைய வேண்டும்.



படிப்பகம்

★ தலைமை உறுப்பினர்கள், தலைமறைவு ஊழியர்கள், இரகசிய ஊழியர்கள் நேரடியாக மக்களுக்கு வழிகாட்ட/கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கும் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும், வெளிநாடுகளிலும் – இராணுவமுகாம்களிலும் இருந்து செயற்பட்டுவந்த தோழர்களுக்கு முதலில் இவ்வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

★ கட்சியின் ஊழியர்களை தெரிவு செய்யும் மையங்கள், வெகுசனப் பிரிவுகள் குறித்து ஒரு தெளிவான பார்வை – அணுகுமுறை வேண்டும்.

★ யுத்தம் நடந்த பகுதிகளில் சீர்திருத்தம், புனர்வாழ்வு, புனரமைப்பு நடக்கின்றது. முதலாளித்துவ தேசிய சக்திகளின் அரசியல் சமரசத்தை போராட்ட பாதைமாற்றத்தை அம்பலப்படுத்தும் அதேவேளை, புனர்வாழ்வு புனரமைப்பு பொருளாதார நடவடிக்கைகளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் இருந்து அணுக வேண்டும். சீர்திருத்த பொருளாதார அரசியல் பாதைக்கு பலியாகாமல், மக்களின் பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறையுடன் ஈடுபட்டு மக்களை அய்க்கியப்படுத்த வேண்டும்.

★ புரட்சிகர பொதுவுடமை கட்சி உறுப்பினர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் வெகுசன இயக்கங்கள் மத்தியில் செயற்படும் அதே வேளை, தங்களின் சிந்தனைகளை அனைத்து வெகுசனப்பிரிவு சார்ந்த மக்களின், தேசத்தின், நாட்டின் விடுதலைக்கான திட்டங்களை செழுமைப்படுத்தும், ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் என்ற மட்டத்துக்கு தங்களை வளர்க்க வேண்டும், குறுகிய வெகுசனப்பிரிவு சிந்தனைக்கு ஆட்படக்கூடாது.

★ பொதுவுடமைக் கட்சியும், அதன் தலைமை சக்திகளும் (புரட்சிகர ஆற்றல்களை வெளிப்படுத்தி தொடர்ந்து முன்னேடுக்கும் நோக்கில்) கட்டியமைக்கும் வெகுசன அமைப்பை/ கட்சியின் முக்கிய தலைமைச் சக்திகளே இவ்வெகுசன அமைப்பில்/கொரில்லா அமைப்பில் அங்கம் வகித்து வழிநடத்தி செல்வதால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பொதுவுடமைக் கட்சியின் செயற்பாடுகள், இவ்வெகுசன அமைப்பு / கொரில்லா அமைப்பு மட்டத்திற்கு கீழ் இறங்கி வருகிறது.

எனவே கட்சி திட்டத்துக்கும், வெகுசன அமைப்பு திட்டத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் தெளிவாக புரிந்து கொள்ளப்படுவதுடன், தனித்தனியான வெகுசன திட்டமாக – மாற்றுவதும் அல்லது வெகுசன திட்டத்தை – பொதுவுடமைக் கட்சி திட்ட அரசியலாக புரிந்து கொள்வது நடைமுறைப் படுத்துவது, கட்சியையும் – கொரில்லா போராட்ட அமைப்பையும் சமன்படுத்தி அணுகுவதும் அதே அளவு தவறாகும், கட்சியின் தலைமைப் பங்கு சரியாக புரிந்து வழிநடத்தப்பட வேண்டும்.

இலங்கைப் பொதுவுடமைக் கட்சி (CPC) தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டும் போராடும் செயற்பாட்டில் பெரும் பங்கு வழங்கியது. ஆனால் தொழிற்சங்க இயக்கத்தை கட்டி போராடுவதையே கட்சியை கண் கட்டி போராடுவதாக புரிந்து செயற்பட்டது, கட்சி திட்டத்துக்கும் தொழிற்சங்க திட்டத்துக்கும் இடையிலான வேறுபாடு புரிந்து கொள்ளப்படவில்லை. தோழர் சண் பிற்காலத்தில் இத்தவறை புரிந்து அரசியல் ரீதியாக சுயவிமர்சனம் செய்தார். ஆனால் இறுதிவரை நடைமுறையில் இத்தவறு சரி செய்யப்படவில்லை.

இதை புரட்சிகர இலங்கை பொதுவுடமைக் கட்சி (RCPC) கோட்பாடு ரீதியில் அரசியல் முறையில் புரிந்து கொள்வதுடன், நடைமுறையில் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை தெளிவாக வெளிப்படுத்தி செயற்படவேண்டும்.

ஏகாதிபத்திய கொலனிய கட்டத்தையும் இலங்கை மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதில் பொதுவுடமைக் கட்சியின் பங்களிப்பு, சரி – தவறுகள் பற்றிய ஒரு தெளிவான பார்வை வரையறுப்பு (CPC) இடம் இருக்கவில்லை, இதனால் கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இலங்கை புதிய சனநாயக / சோசலிச புரட்சிக்கும் இடையிலான தொடர்பு பற்றிய கொள்கையிலும், பொதுவுடமைக் கட்சியின் மூலோபாய – தந்திரோபாய வழியிலும் – பணியிலும் தெளிவு இருக்கவில்லை. பிரித்தானிய கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்த இலங்கை முதலாளித்துவ – நிலப்பிரபுத்துவ சக்திகளின், விடுதலை இயக்கங்கள் அவற்றுடனான உறவு மற்றும் முரண்பாடு பற்றிய தெளிவான பார்வை – அணுகுமுறை – போராட்ட முன்னேடுப்பு இருக்கவில்லை.



படிப்பகம்

அதிகார மாற்றம், போலிச்சுதந்திரம் என்பவற்றுடன் ஏகாதிபத்திய புதுக்கொலனிய கட்டம் மற்றும் புதுக்கொலனிய நாடுகளின் புதியசனநாயக/சோசலிச புரட்சி பற்றிய கருத்தாக்கங்கள் (CPC) இடம் இருந்தது. சர்வதேசிய பொதுவுடமை இயக்கத்துடன், அதிலிருந்த புரட்சிகர போக்குகளுடன் இருந்த உறவு இதில் முக்கிய பங்கு வழங்கியது. புதுக்கொலனிய நாடுகளின் புதியசனநாயகப் புரட்சி குறிப்பான நாடுகள், குறிப்பான சூழ்நிலைமைகளை பொறுத்து உள்நாட்டு வர்க்கப் போராட்டங்களை முதல்நிலைப்படுத்தியும் அல்லது தேசிய விடுதலை அம்சத்தை முதல்நிலைப்படுத்தியும் வர்க்கப் போராட்டங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஏகாதிபத்திய புதுக்கொலனிய நாடுகளின் புதிய சனநாயகப்புரட்சி திட்டத்தில் இவை இரண்டும் பிரிக்கமுடியாத அம்சங்களாக விளங்கின– விளங்குகின்றன.

ஏகாதிபத்திய உள்முரண்பாடும், புதுக்கொலனிய சுரண்டலும் ஒடுக்குமுறையும் வளர வளர புதுக்கொலனிய அரசுகளின் ஒடுக்குமுறை, சுரண்டல், உற்பத்தி மற்றும் விநயோகத்திற்கான சந்தைப்போட்டியும் உள்நாடுகளில் புதிய பரிமாணம் எடுத்தது. இன–மத–பிரதேச வகைப்பட்ட தேசிய ஒடுக்குமுறைகள் கூர்மையடைந்தன.

ஏகாதிபத்திய புதுக்கொலனிய தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தேசிய விடுதலை எழுச்சிகளைவிட, புதுக்கொலனிய நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசிய விடுதலை எழுச்சிகள் முன்னிலைக்கு வந்தன. இவ் எழுச்சிக்கு தலைமை தாங்கிய முதலாளித்துவ – குட்டி முதலாளித்துவ அரசியல் சக்திகள் தங்களின் வரலாற்று ரீதியான உள்நாட்டு அரசியல் – பண்பாட்டு அரங்குகளை பொறுத்து மதப்பண்புகளை – பிரதேசப் பண்புகளை – மொழிப்பண்புகளை தேவைப்படுகையில் சாதியப் பண்புகளையும் கூட மையப்படுத்தி எழுச்சிகளை கட்டியமைத்தன. கட்டியமைத்து வருகின்றன.

CPC, புதுக்கொலனியம் பற்றி பேசியது. ஆனால் புதுக்கொலனிய தேசிய ஒடுக்குமுறை இலங்கையில் வெளிப்படுத்திய தாக்கங்களை இலங்கை அரசு – சிறீலங்கா அரசாக மாறிய வரலாற்றுப் போக்கை தேசிய இன ஒடுக்குமுறை வளர்ச்சியை, தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய விடுதலைக்கான எழுச்சியை – கோரிக்கைகளை புரிந்து கொள்ளத் தவறியது, பொருளாதார ரீதியிலும்– சமூகரீதியிலும் ஒடுக்கப்பட்ட சாதிகளின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை தலைமை தாங்கி முன்னேடுத்த CPC. ஒடுக்கப்பட்ட அழித்தொழிக்கப்பட்டு வந்த தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டத்தை தலைமை தாங்கி முன்னேடுக்க தவறியதற்கான காரணங்களை குறிப்பாக நாம் கண்டுகொள்ள வேண்டும்.

ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறுமனே உள்நாட்டு இன ஒடுக்குமுறை அரசுக்கு எதிரான போராட்டம், இனவிடுதலைப் போராட்டம் என்ற மட்டத்துடன் நிறுத்தி தனிநாடாக்குவது அல்லது, அதே பழைய இன ஒடுக்குமுறை அரசுடன் சமரசம் செய்து தோற்றத்தில் **“சுதந்திர தேசம்”** என்ற அதிகாரப் பங்கீட்டுடன் வழமையான ஏகாதிபத்திய புதுக்கொலனிய தேசிய ஒடுக்குமுறையை அங்கீகரித்து தேசிய இனவிடுதலைக்கு துரோகம் செய்வது. உலக ஏகாதிபத்திய அமைப்புடன் உலக கொள்ளைக்காரர்களுடன், உலகளவில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி இரத்தம் குடிப்பவர்களுடன் சமரசப்பட்டு தங்களின் ஆட்சி அதிகாரத்தை மட்டும் நிலை நிறுத்திக் கொள்வதா ? என்பது இன்று இலங்கையில் தமிழீழ தேசியவிடுதலைச் சக்திகள் முன் எழுந்து நிற்கும் கேள்வி ?

விடுதலைப்புலிகளின் எதிர்காலம் குறித்து எழுந்து நிற்கும் கேள்வி ?

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் கூட பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தேசிய விடுதலை போராட்டமாக வளர்ந்ததில் இருந்து தமிழீழ புதிய சனநாய அரசை நிறுவும் போராட்டத்தில், முதல்நிலை அம்சமாகியுள்ளது. இலங்கைப்புதிய சனநாயகப் புரட்சி, தமிழீழ புதிய சனநாயக புரட்சி – சிறீலங்கா புதிய சனநாயகப் புரட்சி என்ற இரண்டு முக்கிய கூறுகளை – போக்குகளை வரலாற்று ரீதியாக வெளிப்படுத்தியுள்ளது. இரண்டு போக்குகளையும் அதற்கே உரிய தனித்தன்மைகளுடன் முன்னேடுத்து – வழிநடத்தி செல்வது இலங்கை புதிய சனநாயக புரட்சியை வெற்றிநோக்கி கொண்டு செல்வது என்ற நிலைப்பாட்டில் புரட்சிகர பொதுவுடமைக் கட்சி (RCPC) உள்ளது.

சிறீலங்கா புதிய சனநாயக புரட்சியில், உள்த் தேச வர்க்கப் போராட்டம் முதல் நிலை அம்சமாகவும், ஏகாதிபத்திய புதுக் கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டம் துணை நிலை அம்சமாகவும் இருந்து வந்தது.

தமிழீழ புதிய சனநாயக புரட்சியில் சிறீலங்கா அரசு எதிர்ப்பு – ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை முதல்நிலை அம்சமாகவும் உள்த் தேச வர்க்கப் போராட்டம் துணைநிலை அம்சமாகவும் இருந்து வருகிறது.

சிறீலங்கா இனவாத அரசு எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது இரண்டு புரட்சிகர போக்குகளிலும் பொதுவான மையமான அம்சம், அதே வேளை எதிரிகளின் குறிப்பான முகங்களை குறிப்பான வகையில் கண்டு கொண்டு எதிர்த்துப் போராட இரண்டு போக்குகளும் தனித்தன்மையுடன் பரஸ்பரம் பங்காற்ற முடியும். இலங்கையின் புதிய சனநாயக புரட்சிப்போக்கு இவ்வழிமுறை ஊடாக மட்டுமே வரலாற்று ரீதியாக உள்ள தடைகளை அவநம்பிக்கைகளை களைந்து அய்க்கியப்படமுடியும்.

எனவே தமிழீழ முதலாளித்துவ தேசிய இன இயக்கங்கள் அரசியல் சக்திகள், விடுதலைப்புலிகள் சமரசப்பாதைக்கு சென்றாலும் தமிழீழ தொழிலாளி வர்க்க அரசியல்சக்திகள், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அதன் உயர்ந்த பட்ச இலக்கு நோக்கி தொடர்ந்து முன்னேடுக்க வேண்டும் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் வெற்றியடைந்து வரும் சூழ்நிலைமையில், புலிகளின் – சமரச முயற்சிகளை ஆதாரம் காட்டி முதலாளித்துவ சக்திகள் சமரசம் அடைவார்கள் என ஆரம்பம் முதல் சொல்லி வருகிறோம். புலிகள் இன்று நீருபித்துவிட்டார்கள். என "சாஸ்திரம்" சொல்கிறார்கள். சில இடதுகள், இவர்கள் புலிகள் எப்போது சமரசப்படுவார்கள் என காத்திருந்தவர்கள்.

இவர்கள் எல்லாம் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டம் காரிய சாத்தியம் அற்றது வர்க்கப்போராட்டம் மட்டுமே காரிய சாத்தியம் என்று கூறிவரும் சக்திகள், சிந்தாந்த அரசியல் போராட்டம் மூலம் இவர்களை நாம் வெற்றி கொள்ள வேண்டும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் ஆழமானதாக, காரிய சாத்தியமானதாக மாற்றும் போராட்டத்தில் நாம் உறுதியாக நிற்பதன் மூலம், ஏகாதிபத்திய உலக மயமாக்கல் கொள்கை வழியிலான தேசிய ஒடுக்குமுறைக்கு – புதுக்கொலனிய முறைக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்திலும் **தமிழீழ மக்களின் போராட்டம் முன்னுதாரணமானதாக விளங்க முடியும்.** இலங்கையின் புதிய சனநாயக புரட்சியிலும், புதுக்கொலனிய நாடுகளின் தேசிய விடுதலை எழுச்சிக்கும் தொடர்ந்து நம்பிக்கை நட்சத்திரமாக இருக்க முடியும். RCPC தேசிய இனப்பிரச்சனையில் முதலாளித்துவ தேசிய வாதத்துக்கு எதிரான உறுதியான சித்தாந்த அரசியல் போராட்டத்தை தொடர்வதுடன் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலுள்ள திசை விலகல்களுக்கு எதிராகவும் தொடர்ந்து போராட வேண்டும்.

சோவியத்தில் – சீனத்தில் **'சொல்லில் சோசலிசம்' 'செயலில் முதலாளித்துவம்'** என்ற முதலாளித்துவ பாதை மாற்றத்தின் பின் சர்வதேச பொதுவுடமை இயக்கத்தில் எழுந்த இரண்டு போக்குகள் இன்றுவரை பொதுவுடமை இயக்கங்கள் மத்தியில் தவறுகளை உருவாக்கிவிட்டுள்ளன.

சோவியத்தில் குருச்சேவ் தலைமையில் வெளிவந்த திரிபுவாதப் பாதை **"சோசலிசம் பலப்பட்டுள்ள தீர்மானகரமான உலகப் போக்காக இருப்பதால் முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்திய அரசுகளையும் சமாதான வழி முறை மூலம் – தேர்தல் பாதை மூலம் தூக்கி எறிந்து பொதுவுடமைக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றமுடியும். சோசலிசத்தை நிறுவ முடியும்".** என்ற வழியை முன்வைத்து சர்வதேச பொதுவுடமை இயக்கத்தில் (ICM) பலாத்கார புரட்சிபற்றிய நிலைப்பாட்டில் திரிபுவாத பார்வையை முன்தள்ளினார்.

சர்வதேசளவில் ICM இல் நடந்த **"மாபெரும் விவாதத்தில்"** ICM இல் இருந்த கட்சிகள் பிளவுப்பட்டன. திரிபுவாத முகாமுக்கு ரசியாவும், புரட்சிகர முகாமுக்கு சீனக்கட்சியும் தலைமை தாங்கின. இப்பிளவு இலங்கையிலும் CPC இலும் வெளிப்பட்டது. பெரும்பாலான நாடுகளின்


படிப்பகம்

பொதுவுடமைக் கட்சிகள் மத்தியில் திரிபுவாதப்பாதை – புரட்சிகரபாதை என்பன கோட்பாடு வழிமுறை மூலம் மார்க்சிய – லெனினிய (M.L) சக்திகள் என்ற பெயரில் பிளவுகள் அடையாளம் காட்டப்பட்டது. ஆனால் இலங்கையில் பொதுவுடமை இயக்கம் ( ) அடைப்புக்குறி மற்றும் நாடு சார்ந்த பிளவாக அடையாளம் காட்டப்பட்டது, உ+ம் CPC (ரசியசார்பு) CPC (சீனச்சார்பு) இந்த அணுகுமுறை மிகமிக சிறுபிள்ளைத்தனமாக வெளிப்பட்டது. கோட்பாட்டு ரீதியான பிளவை உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லத் தவறியது.

இத்தவறை நாம் திட்டவட்டமாக விமர்சனப்படுத்தி திருத்திக் கொள்ள வேண்டும். எந்த ஒரு பிரச்சனையிலும் குறிப்பிட்ட நாடு அல்லது கட்சி சார்ந்து அவர்கள் வழங்கும் பொருளாதார உதவிகள் சார்ந்து சிந்திக்கும் – நிலைப்பாடு எடுக்கும் கண்ணோட்டத்தை நாம் அறவே ஒழிக்க வேண்டும்.

CPC (சீனச்சார்பு) **1964** உடைவுக்கு பின் மூலோபாய ரீதியான நிலைப்பாடுகளில் புரட்சிகர தொழிலாளி வர்க்க நிலைப்பாட்டை முன்வைத்தது. இதில் பலாத்கார ரீதியான புரட்சி மூலம்தான் அரசு அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என தீர்மானித்தது. ஆனால் அதன் பின் எந்த ஒரு கட்டத்திலும் குறைந்தபட்சம் வெகுசனப்போராட்டங்கள் எதிரிகளால் பலாத்காரரீதியாக நசுக்கப்பட்ட போதும் கட்சியின் தலைமையின் கீழ் கொரில்லாக்குழுக்கள் கட்டப்படவில்லை. ஆயுதப்போராட்ட அனுபவம் என்பது கட்சிக்கு இல்லாமல் போய்விட்டது.

RCPCகட்சியை, கட்சியின் வெகுசன இயக்க வேலைகளை வளர்க்கக் கூடிய முறையில் தொடக்கம் முதலே தேவைக்கு உருவாகும் கொரில்லாக்குழுக்கள் என்ற நிலையில் தொடங்கி, கட்சியின் வளர்ச்சிக்கு – வெகுசனப் போராட்ட முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் இராணுவ மூலோபாயத்துக்கு உட்பட்டு படிப்படியாக நிரந்தர கொரில்லாக்குழுக்களாக வளர்ச்சி பெறும் வகையில் கட்டப்படும்.

சர்வதேச பொதுவுடமை இயக்கத்தில் (ICM) ஏற்பட்ட பிளவுக்கு பின், மாபெரும் விவாதத்தின் பின் சர்வதேச அளவில் புரட்சிகர பொதுவுடமைக் கட்சிகளை ஒன்றினைக்கும் கடமையை மாஓ தலைமையிலான சீன பொதுவுடமைக்கட்சி செய்திருக்க வேண்டும், மூன்றாவது அகிலம் கலைக்கப்பட்டதில் இருந்து சர்வதேச பொதுவுடமை இயக்கத்தில் நடந்த மாற்றங்களை தொகுப்பாக வரிசைப்படுத்தி புரிந்து கொள்வது அவசியம். மீண்டும் உலகளவில் இயங்கும் **“பொதுவுடமை கட்சிகளின் மையங்கள்”** தொடர்பாக நமது கட்சி ஒருநிலைப்பாட்டை எடுக்க ஆரோக்கியமான அணுகுமுறைகளை, உலகளவில் மற்றநாட்டுக் கட்சிகள் – மையங்களுடன் பேண உதவும்.

சீனத்தில் டெங்–குவாகோ பெங் தலைமையில் வெளிப்பட்ட திரிபுவாத வழியும். உலக புரட்சிகர பொதுவுடமை கட்சிகள் மத்தியில், **பலாத்காரப்புரட்சி, அய்க்கிய முன்னணி கொள்கை சோசலிச பொருளாதாரம்** பற்றிய பார்வைகளில் பெரும் தாக்கதை ஏற்படுத்தியது ஏகாதிபத்திய அமைப்பு பலவீனப்பட்டுள்ளது. சோசலிச அமைப்பு பலப்பட்டுள்ளது எனக் கணிப்பிட்டு குருச்சேவிய தலைமை சமரச, பாராளுமன்ற வழி, சமாதான சகவாழ்வு வழியிலான புரட்சிபற்றி – அதிகார கைப்பற்றல் குறித்து பேசியது. இதே கணிப்பீட்டுடன் ஏகாதிபத்தியம் குறித்த தவறான மதிப்பீட்டுடன் **புரட்சிவழிமுறை அதிகார கைப்பற்றல் வழிமுறையை** டெங்–குவாகோ பெங் தலைமை **துரித இராணுவ தயாரிப்பு– விரைவான புரட்சி வெற்றி** குறித்து விளக்கியதுடன், படையை கட்டினால் எல்லாவற்றையும் சாதித்து விட முடியும் என்ற திரிபுவழியை முன்னிறுத்தியது கட்சியை கட்டுவது என்பதே படையை கட்டுவதுதான் என சமன் செய்யும் ஒரு போக்கு வளர்த்தெடுக்கப்பட்டது.

**ஒன்றில் கட்சியும் – வெகுசன இயக்கமும் சமன் செய்யப்பட்டது, அல்லது கட்சியும் – படையும் சமன் செய்யப்பட்டது** பொதுவுடமைக் கட்சி பற்றிய மார்க்சிய – லெனினிய கண்ணோட்டம் கைவிடப்பட்டது.

இதேபோன்று உலக நிலைமைகள், உள்நாட்டு நிலமைகள் அதில் குறிப்பான அரசுகளின் நிலைப்பாடுகள் செயற்பாடுகள் மீதான கண்ணோட்டத்தில் இருந்து புரட்சிகர பொதுவுடமைக் கட்சி அய்க்கிய முன்னணி பற்றி தீர்மானிக்க வேண்டும். இதற்கு பதிலாக மேல் இருந்து கட்டப்படும்

தந்திரோபாய ரீதியான அய்க்கிய முன்னணிக் கண்ணோட்டத்தை மாற்றி **மூன்று உலக கோட்பாடு மூலம் அய்க்கிய முன்னணிக் கண்ணோட்டத்தை மூலோபாயரீதியாக அணுகும்** தவறையும் டெங்–திரிபுவாத மார்க்கம் முன்தள்ளியது, இந்த இரண்டு நிலைப்பாடுகளும் பொதுவுடமைக் கட்சிகள்–புரட்சிகர சக்திகள் மத்தியில் உடுருவியுள்ளது. புரட்சிகர பொதுவுடமைச் சக்திகளை – கட்சிகளை அய்க்கியப்படுத்தும் வேளையில் இவற்றை தெளிவாக உணர்த்தி சரி செய்யப்படவேண்டும்.

**முதலாளித்துவ பொருளாதாரம், சோசலிச மையத்திட்டமிடல் பொருளாதாரம், கலப்பு பொருளாதாரம்** இவை உலகம் முழுவதும் தாக்கம் செலுத்திய நிலமையில், அமெரிக்க–சோவியத்–சீன பாணிப் பொருளாதார அரசியல் முறைகள், ஒவ்வொரு புதுக்கொலனிய நாடுகளிலும் இந்நாடுகளில் உள்ள வெவ்வேறு ஆளும் வர்க்க கட்சிகளும், வெவ்வேறு பாணிகளை பின்பற்றுவதாக கூறி உள்நாட்டு ஆட்சி அதிகாரத்தை மாறி மாறி கைப்பற்றின. ஆனால் இக்கட்சிகள் எல்லாம் உள்நாட்டு தரகு முதலாளித்துவ – நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் உலக ஏகாதிபத்திய அமைப்பின் நலன்களுடன் திட்டவட்டமாக முரண்பட்டு செயற்படவில்லை **அன்னிய மூலதனங்களை பெரும் உள்நாட்டு மூலதனங்களை தேசியமயமாக்கவில்லை.** உள்நாட்டு மூலதனங்களை சிலதுறைகளில் அரசு மூலதனத்தையும், அரசு – தனியார் கூட்டு மூலதனத்தை உருவாக்கும், தேசிய மயமாக்கல்களை செய்தன.

ரசிய சார்பு, சீனசார்பு பொதுவுடமைக் கட்சிகள் என்று அறிவித்த கட்சிகள் ரசிய/சீன பாணி பொருளாதார அரசியல் கொள்கைக்கு மூலாம் பூசிக்கொண்டிருந்த உள்நாட்டு தரகு கட்சிகளை கூட **“தேசிய முதலாளித்துவ கட்சி”** என பட்டம் சூட்டி பாராளுமன்ற ஆசனங்களை பெற அய்க்கிய முன்னணி கட்டின. மாறியுள்ள உலக நிலமையில் எல்லாம் அப்பட்டமான ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கைகளை உள்நாட்டு கட்சிகள் பின்பற்றுவதாக அறிவித்து செயற்படுகின்றன. ஆனால் இன்று கூட இந்த சார்பு / பொதுவுடமைக் கட்சிகளால் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியவில்லை. **இலங்கை புதிய சனநாயக கட்சி** இன்னும் கூட சிறீலங்கா சுதந்திரக் கட்சியை தனது திட்டத்தில் தேசிய முதலாளித்துவ கட்சியாக காண்கிறது. இக்கட்சி இந்தியாவில் உள்ள CPM போன்ற திரிபுவாதக் கட்சிகளை தங்களின் சர்வதேச சகோதரக்கட்சியாக பார்க்கிறது.

இக்கட்சிகளின் தவறான நிலைப்பாடுகளுக்கு எதிராக தொடர்ந்து ஆரோக்கியமான போராட்டங்களை நடத்த வேண்டும். உறுதியான வெகுசனப் போராட்டங்களும், நம்பிக்கையளிக்கும் கொரில்லா நடவடிக்கைகளை நமது கட்சி வெளிப்படுத்த வேண்டும். இதனால் ஏனைய கட்சிகள் – இயக்கங்களில் உள்ள நேர்மையான மார்க்சிய – லெனினிய சக்திகள் புரட்சிகர கட்சியை நோக்கி அய்க்கியப்படுவர். அவ்வாறு வெளிவரும் சக்திகளை அவர்கள் வாழும் பகுதியில், போராடும் தளங்களில் புரட்சிகர அரசியலுக்கு – மக்களுக்கு நேர்மையாக இருந்து செயற்பட கற்றுக் கொடுக்க வேண்டும். அதன் பின்பே கட்சியில் நேரடியாக இணைக்க வேண்டும்.

வரலாற்றில் முதலாளித்துவம், ஏகாதிபத்தியமாக (வல்லரசியமாக) மாறிய பின், ஏகாதிபத்திய நாடுகள் உலகில் மன்னராட்சிகளை, தேசங்களை, நாடுகளை வன்முறை மூலம் ஆக்கிரமித்து புதிய எல்லைகளை நாடுகளை உருவாக்கி அந்நாடுகளின் வளங்களை–மக்களின் உழைப்பை சுரண்டி கொள்ளையடித்து வந்தன. **ஏகாதிபத்திய கொலனிய** கட்டம் முழுவதும் இது நடந்தது. கொலனிய நாடுகளின் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள்–தேசிய விடுதலை யுத்தங்கள் வெடித்தது. தேசிய விடுதலைப் போராட்டங்களில் இருந்த நிலப்பிரபுத்துவ–முதலாளித்துவ அரசியல்–இராணுவ தலைமைகளின் கைகளை மீறி – தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகளின் தலைமை தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்கை எடுத்தது. முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில் – தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நடந்த சோசலிச புரட்சிகளும் – கொலனிய நாடுகளின் தேசிய விடுதலைப் புரட்சிகளும் – போராட்டங்களும் உலக சோசலிச புரட்சியின் இருமுனைகளாகியது.

ஏகாதிபத்திய கொலனிய கட்டத்தில் (முழுக்கொலனிய ஆதிக்கமும், அரைக் கொலனிய – அரை நிலப்பிரபுத்துவ ஆதிக்கமும் நிலவிய நாடுகள் இருந்தன) இந்நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஏகாதிபத்திய தேசிய ஒடுக்கு முறைக்கு உள்ளான பலவர்க்கங்களும், தங்களின் சொந்த வர்க்க அரசியலில் இருந்து வேறுபட்ட போராட்ட வடிவங்களில், நாட்டுமக்களை அணிதிரட்டி

www.padippakam.com

போராடின வரலாற்று ரீதியிலும், சித்தாந்த அரசியல் ரீதியில் அமைப்பாக்கல் முறையிலும் மிக முன்னேறிய வர்க்கமான தொழிலாளி வர்க்கம் தனது வர்க்க அரசியலில் இருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை – போரை தனது தலைமையில் முன்னேடுத்தது. பொது எதிரிக்கு எதிரான பேராட்ட சக்திகளை–வர்க்கங்களை தனது அரசியல் தலைமையின் கீழ் அய்க்கியப்படுத்தியது. முரண்பட்ட வர்க்கங்களின் ஆனால் பொது எதிரிக்கு எதிராக அய்க்கிய முன்னணி கட்டி போராடியது. தேசிய விடுதலைப் போராட்டங்களில் மூலோபாய ரீதியிலும் தந்திரோபாயங்களிலும் தலை சிறந்து கொள்கைகளை–வழிகாட்டல்களை கொண்டிருந்த தொழிலாளி வர்க்ககட்சிகள், தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழியாகவும் சமூகப்புரட்சியை நடத்தின, புதிய சனநாயக அரசை நிறுவின.

உலக ஏகாதிபத்தியம், உலகு தழுவிய தனது வீழ்ச்சியை தோல்வியை தடுக்க முயன்றது. கொலனிய நாடுகளில் தனக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த, தனது வர்க்க நலனுக்கு வரலாற்று ரீதியில் முரணற்ற இளய முதலாளித்துவ – கிளட்டு நிலப்பிரபுத்துவ போராட்ட சக்திகளுடன் நீண்டகால நோக்கிலான சமரசத்தை செய்து கொண்டது. அதிகாரத்தை பங்கிட்டுக் கொண்டது. போலியான **'தேசிய சுதந்திர'** அரசுகளை உருவாக்கின. வர்க்க எதிரியான தொழிலாளி வர்க்க கட்சிகள், சோசலிச / புதிய சனநாயக அரசுகளுடன் தற்காலிக சமரசங்களை செய்து கொண்டது. ஏகாதிபத்தியம்.

**உலகில் ஏகாதிபத்திய புதுக்கொலனிய கட்டம் உருவானது :** கொலனிய கட்டத்தில் இருந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம், ஏகாதிபத்திய முறையை தோற்கடிக்காத நாடுகள் எல்லாம் ஏகாதிபத்திய புதுக்கொலனிய நாடுகளாக மாறின.

இப்புதுக்கொலனிய அரசு அதிகாரத்தை கைப்பற்றிய உள்நாட்டு வர்க்கமும், தரகு அரசியல் கட்சிகள், தொடர்ந்து அதிகாரத்தை பேணவும், வர்க்கப் போராட்டங்களை திசை திருப்பவும் புதிய வழிகளை கையாண்டன.

இனவாதத்தை – மதவாதத்தை – சாதிவாதத்தை – பிரதேசவாதத்தை மையப்படுத்தி இன ஒடுக்குமுறை – மத ஒடுக்க முறை அரசுகளை நிறுவியுள்ளன. நிறுவி வருகின்றன. பிரித்தானிய பிரித்தாழும் சூழ்ச்சி, புதுக் கொலனிய நாடுகள் ஒவ்வொன்றின் குறிப்பான சமூக சூழ்நிலைமைகள் – சமூக முரண்பாடுகளை பயன்படுத்தி நவீனமயமான முறையில் ஏகாதிபத்திய நிறுவனங்களால் பிரித்தாளப்படுகிறது.

ஏகாதிபத்திய முறைக்கு, தேசிய ஒடுக்குமுறைக்கு–சுரண்டலுக்கு எதிரான புதிய சனநாயக வர்க்கங்கள் ஓரணியாகிவிடாதபடி, வர்க்கங்களை, வர்க்க அரசியல் ஸ்தாபனங்களை மோதவிடும், ஏகாதிபத்திய விசுவாசமுள்ள கட்சிகள்/இயக்கங்களை ஊக்குவித்து, மற்ற கட்சிகளை இயக்கங்களை அழித்து போராட்டங்களில் கூட தனி இயக்க சர்வாதிகார முறையை பலாத்கார வழியில் உருவாக்குகின்றன. மக்களின் போராட்டங்களை இலகுவாக கையாள முடிகிறது.

புதிய சனநாயக வர்க்கங்களை ஓரணிப்படுத்திய தொழிலாளி வர்க்கத்தை பிளப்பத்திலும் நவீன வழிகள் கையாளப்படுகின்றது. பொருளாதார ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றுபடும் தொழிலாளி – விவசாயி வர்க்கங்களை மற்றய வர்க்கங்களையும் கூட, சமுதாயரீதியான ஒடுக்குமுறை சார்ந்த முரண்பாடுகளில் தூண்டி விடுவதன் மூலம், **சமூகரீதியான முரண்பாடுகளில் மக்களை– தேசங்களை பிளவுபடுத்தி தனித்தனி சமூக அரசியல் குழுக்களாக கட்டமைத்து** ஏகாதிபத்திய பொருளாதார ஒடுக்குமுறையை மறைத்து உலகை கட்டியாள முடிகிறது.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தொழிலாளி, ஒடுக்கப்படும் மதத் தொழிலாளி, ஒடுக்கப்படும் சாதியை சேர்ந்த தொழிலாளி, புறக்கணிக்கப்படும் பிரதேசத்தை சேர்ந்த தொழிலாளி முதலில் தன் மீது நடத்தப்படும் சமூக ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டுங்கள். அதன்பின் தான் தன் மீது சமூக ஒடுக்குமுறை செய்யும் இன–மத–சாதி–பிரதேசத்துள் உள்ள தொழிலாளியுடன் ஒன்றுபட முடியும் என பேசுகின்ற அளவுக்கு சமூகரீதியான ஒடுக்குமுறை தினசரி வாழ்வில் உணரப்படுகின்றது. தினசரி வாழ்வில் சமூகரீதியிலான ஒடுக்குமறையும், பொருளாதார சுரண்டலும் பிரித்து பார்க்க முடியாதபடி எதிர் கொள்கின்ற போதும். ஒன்றை மட்டும் முதன்மைப்படுத்தி தீர்வு தேடும் தவறான சிந்தனை ஊக்குவிக்கப்படுகிறது. தமிழீழ குட்டி முதலாளிய இயக்கங்கள். **'முதலில் தேசிய இன விடுதலை அதன் பின் தான் வர்க்க விடுதலை'** என கோட்பாடாகவே பேசியதை நாம் மறக்க முடியுமா?


படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்தியம், சமூகத்தில் உள்ள சமூகரீதியான முரண்பாடுகளை தனக்கு சாதகமாக தன்னுடைய பொருளாதார அரசியல் ஒடுக்குமுறை—சுரண்டலை மறைக்க பயன்படுத்துகிறது, ஊக்குவிக்கின்றது. சமூகரீதியில் ஒடுக்கப்படும் இச்சமூகப்பிரிவுகளில் உள்ள நிலப்பிரத்துவ—முதலாளித்துவ—குட்டி முதலாளித்துவ வர்க்க அரசியல் சக்திகள் தங்களின் வர்க்க சுரண்டல் நலனில் இருந்து பொருளாதார சுரண்டல் ஒடுக்குமுறையை மறைத்து – **ஏகாதிபத்திய தேசிய ஒடுக்கு முறையில் உள்ள பொருளாதார அம்சங்களை பேசாது.** சமூக ஒடுக்குமுறையை மட்டும் பிரதானப்படுத்தி தங்களின் அரசியலை வெளிப்படுத்துகின்றன. நிலவுகின்ற – புதுக்கொலனிய அரசு அமைப்புக்குள் தங்கள் சமூகப் பிரிவின் தலைமையாக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முயல்கின்றன.

தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள், பொருளாதார ஒடுக்கு முறையை மட்டும் பிரதானப்படுத்தி சமூக ஒடுக்குமுறைகளை கவனத்தில் கொள்ளத் தவறுகின்றன. சமூகரீதியில் ஒடுக்கும் இன—மத—சாதி—பிரதேச பின்புலம் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதி, தனது சமூகப்பிரிவிடம்—தன்னிடம் உள்ள சமூக ரீதியான ஒடுக்குமுறைச் சிந்தனையை நடைமுறையை தொடர்ந்து எதிர்த்து போராட—களைய மறுக்கும் போது, பொருளாதார ரீதியான ஒடுக்குமுறையை—சுரண்டலை எதிர்க்கும், சமூகரீதியான ஒடுக்குமுறைய காப்பாற்றும் பிற்போக்குவாதியாக மாறிவிடுகின்றனர். இத்தகைய கொள்கை கொண்ட தொழிலாளி வர்க்ககட்சிகள்கூட சமூகரீதியில் ஒடுக்கும் சமூகப்பிரிவின் நலன் காக்கும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளாக வெளிப்படுகின்றன.

புரட்சிகர தொழிலாளியும், தொழிலாளி வர்க்க கட்சியும் பொருளாதார ஒடுக்குமுறைக்கு எதிராக விடாப்பிடியாக போராடுவதுடன், ஒடுக்கப்படும் சமூகப்பிரிவுகளின்—அடிநிலைச் சமூகப்பிரிவுகளின் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களையும் தாங்களே முன்னின்று நடத்த வேண்டும். வர்க்க கண்ணோட்டத்தில் இருந்து வர்க்க அரசியல்/உணர்வை வளர்க்கும், வர்க்க அதிகாரத்தை நிறுவும் நோக்கில், சமூகத்தின் அனைத்து சனநாயக கோரிக்கைகளையும் முன்னேடுக்கவேண்டும். ஒடுக்கும் சமூகப் பிரிவுகளில் இருந்து வரும் புரட்சிகர கட்சியின் உறுப்பினர்கள் இப்போராட்டங்களில் வெளிப்படையாக முன்னின்று போராட வேண்டும். உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை தொடர்ந்து முன் வைக்க வேண்டும். இதன் மூலம் தான் ஏகாதிபத்திய பொருளாதார தேசிய ஒடுக்கு முறையையும் , அனைத்து அரங்கிலுமான சமூக ரீதியான ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறியும் கட்சியாக மீண்டும் புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சி மிளிர முடியும். சமவுடமையையும்—பொதுவுடமையும் படைக்க முடியும்.

அமைப்புக்குழு

புரட்சிகர இலங்கை பொதுவுடமை கட்சி (RCPC)

**REVOLUTIONARY COMMUNIST PARTY OF CEYLON**



படிப்பகம்